செய்தி வெளியீடு எண்.986 நாள்.14.11.2008

**ஒரே முறை தீர்வுத் திட்டத்தில் விற்பனை வரி நிலுவைத் தொகையை செலுத்த தமிழக அரசின் சட்டம்.**

1991–92 முதல் 2001–02 வரை உள்ள காலத்திற்கு நிலுவையில் உள்ள வரித் தொகையை வசூலிப்பதற்கு தமிழக அரசு ஒரே முறை தீர்வு திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் 2008 இயற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2008–09 ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறை மானியக் கோரிக்கையின்போது 1991–92 முதல் 2001–02 வரையுள்ள காலத்திற்கான நிலுவைகள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகியவற்றின் கீழ் மொத்தம் ரூ.2,711.36 கோடி நிலுவை உள்ளது என்றும் அதனை வசூலிப்பதற்கு ஒரே முறை தீர்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அதற்கான சட்டம் இயற்றப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

அதன்படி தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம், 2008 இயற்றப்பட்டுள்ளது.

இத்திட்டம், 1.4.2002க்கு முன்னர் தமிழ்நாடு பொது விற்பனை வரி, தமிழ்நாடு விற்பனை வரி (உபரி வரி), தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் வரி கேட்பு செய்யப்பட்ட ( demand raised ) இனங்களுக்குப் பொருந்தும்.

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

1. வணிகரின் கணக்குகள் தாக்கல் செய்யப்படாமல் சிறந்த தீர்ப்பின் அடிப்படையில் வரிவிதிக்கப்பட்டு, கேட்பு செய்யப்பட்ட இனங்களில் ( Best of Judgement cases) நிலுவையில் உள்ள வரித் தொகையில், மாதாந்திர படிவங்களில் அறிவித்த வரித் தொகை முழுவதுமாகவும், மீதமுள்ள நிலுவையில் மூன்றில் ஒரு பங்கும், செலுத்தப்படும் தொகையின் மீது ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டித் தொகையும் செலுத்த வேண்டும்.

2. வணிகரின் கணக்குகள் தணிக்கையிடப்பட்டு மாதாந்திர படிவங்களில் அறிவித்த தொகைக்கு மேல் வரிவிதிப்பு செய்து, கேட்பு ( demand ) செய்யப்பட்ட இனங்களில் நிலுவையில் உள்ள வரித் தொகையில், மாதாந்திர படிவங்களில் அறிவித்த வரித் தொகை முழுவதுமாகவும், மீதமுள்ள நிலுவையில் மூன்றில் ஒரு பங்கும், செலுத்தப்படும் தொகையின் மீது ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டித் தொகையும் செலுத்த வேண்டும்.

3. மாதாந்திர படிவங்களின்படி, வரிவிதிப்பு செய்து, கேட்பு ( demand ) செய்யப்பட்ட இனங்களில், நிலுவையில் உள்ள வரித்தொகை முழுவதும் மற்றும் செலுத்தப்படும் தொகை மீது ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டித் தொகையும் செலுத்த வேண்டும்.

4. வரிநிலுவை இல்லாமல் தண்டம் அல்லது வட்டி அல்லது தண்டம் மற்றும் வட்டி நிலுவையில் உள்ள இனங்களில் தண்டத் தொகையில் 10 விழுக்காடு மற்றும் வட்டித் தொகையில் 25 விழுக்காடும் செலுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு நிலுவைத் தொகையை செலுத்தினால் எஞ்சிய நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்படும். பயனீட்டாளர்கள் 1.11.2008 முதல் மூன்று மாத காலத்திற்குள் விண்ணப்பங்களை உரிய கோட்ட வணிகவரி இணை ஆணையர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.